

தமிழ்நாடு அரசு

மூன்றாம் வகுப்பு

பருவம் – I

தமிழ்

ENGLISH

பள்ளிக் கல்வித்துறை

தீண்டாமை மனிதநேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்

தமிழ்நாடு அரசு

முதல் பதிப்பு - 2026

(புதிய பாடத்திட்டத்தின்கீழ்
வெளியிடப்பட்ட முப்பருவ நூல்)

விற்பனைக்கு அன்று

ஓர் அழைப்பு உங்கள் வாழ்க்கையை மாற்றும் (18 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கான 24×7 கட்டணமில்லாத் தொலைபேசி எண்கள்)

குழந்தைத் திருமணம், குழந்தைத் தொழிலாளர் போன்ற பாதிப்புகளுக்கு உள்ளாக்கப்படுகிறீர்களா?
மனம், உடல் மற்றும் பாலியல் சார்ந்த துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்படுகிறீர்களா?
பாதுகாப்பற்ற சூழலில் உள்ளீர்களா?

CHILD LINE 1098 NIGHT & DAY

அழையுங்கள் குழந்தை உதவி எண் 1098

உங்கள் விவரங்கள் பிறருக்குத் தெரியாமல் பாதுகாக்கப்படும்

மனம், உடல் மற்றும் பாலியல் சார்ந்த துன்புறுத்தலுக்கு அல்லது அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்படுகிறீர்களா?
பாதுகாப்பற்ற சூழலில் உள்ளீர்களா?
தேர்வு மற்றும் உயர்கல்விக்கு வழிகாட்டுதல் தேவையா?

14417
கல்வித் தகவல் மையம்

அழையுங்கள் 14417

உங்கள் விவரங்கள் பிறருக்குத் தெரியாமல் பாதுகாக்கப்படும்

உருவாக்கமும் தொகுப்பும்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்
© SCERT 2026

அச்சிட்டு வெளியிடுவோர்

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்

அணிந்துரை

குழந்தைப்பருவம் இயல்பாகவே வியப்புக்குரியதாகவும், எல்லையற்ற ஆர்வத்துடனும், கற்பனை ஆற்றல் உடையதாகவும், எதையும் கண்டறியும் ஆற்றலுடனும் நிரம்பி இருக்கும். இந்த இயல்பே கற்றல் அனுபவத்திற்கான முதல்படி. இதன் அடிப்படையில் மகிழ்ச்சியாகவும் பொருளுணர்ந்தும் ஈடுபாட்டுடனும் கற்பதற்குரிய சூழ்நிலையை உருவாக்கும் நோக்கில் 1முதல் 3ஆம் வகுப்புவரையிலான பாடநூல்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு மாநிலக் கல்விக் கொள்கை 2025-இன் ஒரு பகுதியாக உருவாக்கப்பட்டுள்ள இந்தப் பாடநூல்கள், மாநிலத்தின் அடிப்படைக் கல்வியை வலுப்படுத்துவதில் முக்கியப்படியாக விளங்குகின்றன. **மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சரின்** தொலைநோக்குப் பார்வையும் வழிகாட்டுதலும், இக்கல்விக் கொள்கையின் முக்கியச் சிறப்புகளான குழந்தைமையக் கற்றல், திறன் அடிப்படையிலான கற்றல் மற்றும் உள்ளடங்கிய கற்றல் போன்றவை இப்பாடநூல்களில் வெளிப்படுவதை உறுதி செய்துள்ளன.

பள்ளிக் கல்வித்துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர், பாடப்பொருள் அறிவுடன் 21ஆம் நூற்றாண்டுத் திறன்களை ஒருங்கிணைத்து இப்பாடநூல்களைக் கதைவழிக் கற்றல் அனுபவங்களாக உருவாக்குவதில் அளப்பரிய பங்காற்றியுள்ளார்.

மேலும், திறன் அடிப்படையிலான கற்றல் அணுகுமுறையானது கலைத்திட்டம் மற்றும் மதிப்பீட்டை, மனப்பாடம் செய்து கற்றல் என்ற நிலையிலிருந்து மாற்றி, ஆழமான கருத்தியல் புரிதல் மற்றும் பொருளுணர்ந்து பயன்படுத்துதல் என்ற நிலைக்கு மேம்படுத்தியுள்ளது. பண்புநலன்களை வளர்த்தெடுக்கும் விழுமியக் கல்வி, வாழ்வியல் திறன்கள், கலை மற்றும் உடல் இயக்கத் திறன்களோடு ஒருங்கிணைந்து குழந்தையின் முழுமையான வளர்ச்சிக்கு வழிவகுக்கிறது.

கலைத்திட்ட உயர்மட்ட வல்லுநர் குழுவின் உறுப்பினர்கள், கலைத்திட்ட வடிவமைப்புக் குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் தங்களின் நுட்பமான அறிவு மற்றும் கல்வி அனுபவத்தின் மூலம் இப்பாடநூல்களை வடிவமைத்துச் செம்மைப்படுத்துவதில் தொடர்ச்சியான வழிகாட்டுதலை வழங்கியுள்ளனர். இப்பாடநூலில் குறிப்பிடப்பட்டுள்ள கல்வியாளர்கள் மற்றும் ஆசிரியர்களின் பங்களிப்பும் இதில் அடங்கும்.

இத்தொடக்கநிலையில், கல்வியானது குழந்தைகளுக்கு வலுவான கற்றல் அடித்தளத்தை அமைப்பதோடு அவர்களின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும் துணையாக நிற்க வேண்டும். இதைக் கருத்தில் கொண்டு இப்பாடநூல்கள், குழந்தைகள் பங்கேற்று, பொருளுணர்ந்து ஆழமாகக் கற்கும்வகையில் கீழ்க்காண் கூறுகளுடன் வடிவமைக்கப்பட்டுள்ளன.

- தன்னம்பிக்கையுடன் தம் கருத்தை வெளிப்படுத்த உதவும் பேசுதல் மற்றும் கேட்டலுக்கான வாய்ப்புகள்.
- தருக்கரீதியான சிந்தனை மற்றும் கருத்தியல் புரிதலை வலுப்படுத்தும் கற்றல் செயல்பாடுகள்.
- படித்தல் மற்றும் எழுதுதல் திறன் பெறுவதற்காகப் பாடத்துடன் ஒருங்கிணைத்து அளிக்கப்பட்டுள்ள பயிற்சிகள்.
- நுண்தசை மற்றும் உடலியக்கத் திறன்களை வளர்ப்பதற்கான வரைதல், வண்ணம் தீட்டுதல், வரியொற்றி எழுதுதல் மற்றும் விளையாட்டுச் செயல்பாடுகள்.
- தாமாகக் கற்பதற்கும் சுயமாகச் சிந்திப்பதற்குமான எளிய வாய்ப்புகள்.

விழுமியங்களையும் வாழ்வியல் திறன்களையும் பாடநூல்களில் ஒருங்கிணைத்து வழங்குவதன் மூலம் பரிவு, ஒத்துழைப்பு, பொறுப்புணர்வு மற்றும் தன்னம்பிக்கை போன்ற பண்புகளைக் குழந்தைகள் வளர்த்துக்கொள்ள உதவுகின்றன.

கற்றலானது மனப்பாடம் செய்வதைத் தாண்டி, புரிதல் மற்றும் பயன்பாட்டை நோக்கிய ஒரு திறன் அடிப்படையிலான அணுகுமுறையால் வழிநடத்தப்படுகிறது. மதிப்பீடானது கற்றல் செயல்முறையிலேயே ஒன்றிணைக்கப்பட்டு, தொடர்ச்சியானதாக, பொருளுள்ளதாக, கற்றலுக்குத் துணைபுரிவதாக அமைந்துள்ளது.

இப்பாடநூல்கள், கற்றல் பயணத்தின் வழித்துணை. ஆராயவும், சிந்திக்கவும், தன்னை வெளிப்படுத்தவும் குழந்தைகளுக்கு இவை தளம் அமைத்துக் கொடுக்கின்றன. ஒவ்வொரு குழந்தையும் மகிழ்ச்சியுடன் கற்பதையும், தன்னம்பிக்கையுடன் வளர்வதையும் வலுவான எதிர்காலத்திற்கு அடித்தளமிடுவதையும் உறுதிசெய்யும் ஒட்டுமொத்தப் பொறுப்புணர்வின் வெளிப்பாடாக இப்பாடநூல்கள் விளங்குகின்றன. **"உள்ளடங்கிய, சமவாய்ப்பு மற்றும் எதிர்கால ஆயத்தத்தை உறுதிசெய்யும் மறுஉருவாக்கம் செய்யப்பட்ட கல்வி"** என்ற தொலைநோக்குப் பார்வையை இப்பாடநூல்கள் முன்னெடுத்துச் செல்கின்றன.

இயக்குநர்
மாநிலக் கல்வியியல்
ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்
தமிழ்நாடு



இந்திய அரசமைப்பு

முகப்புரை

இந்திய மக்களாகிய நாம், இந்திய நாட்டினை இறையாண்மையும் சமநலச்சமுதாயமும் சமயச்சார்பின்மையும் மக்களாட்சிமுறையும் அமைந்ததொரு குடியரசாக நிறுவவும்,

அதன் குடிமக்கள் அனைவரும்
சமுதாய, பொருளியல், அரசியல், நீதி;
எண்ணம், அதன் வெளியீடு, கோட்பாடு,
சமயநம்பிக்கை, வழிபாடு இவற்றில் தன்னுரிமை;
சமுதாயப்படிநிலை, வாய்ப்புநலம் இவற்றில் சமன்மை
ஆகியவற்றை எய்திடச் செய்யவும்;

அவர்கள் அனைவரிடையேயும்
தனி மனிதனின் மாண்பு, நாட்டுமக்களின் ஒற்றுமை,
ஒருமைப்பாடு இவற்றை உறுதிப்படுத்தும்
உடன்பிறப்புரிமையினை வளர்க்கவும்;

உள்ளார்ந்த உறுதியுடையராய்,
நம்முடைய அரசமைப்புப் பேரவையில், 1949 நவம்பர் இருபத்தாறாம் நாளாகிய இன்று, ஈங்கிதனால், இந்த அரசமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே வழங்கிக்கொள்கிறோம்.

நாட்டுப்பண்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே!


- *மகாகவி இரவீந்திரநாத தாகூர்.*

நாட்டுப்பண் – பொருள்

இந்தியத் தாயே! மக்களின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற நீயே எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செய்கிறாய். நின் திருப்பெயர் பஞ்சாபையும், சிந்துவையும், கூர்ச்சரத்தையும், மராட்டியத்தையும், திராவிடத்தையும், ஒடிசாவையும், வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சி அடையச் செய்கிறது.

நின் திருப்பெயர் விந்திய, இமயமலைத் தொடர்களில் எதிரொலிக்கிறது; யமுனை, கங்கை ஆறுகளின் இன்னொலியில் ஒன்றுகிறது; இந்தியக் கடலலைகளால் வணங்கப்படுகிறது. அவை நின்னருளை வேண்டுகின்றன; நின் புகழைப் பரவுகின்றன. இந்தியாவின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற தாயே!


உனக்கு வெற்றி! வெற்றி! வெற்றி!



தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!

– 'மனோன்மணீயம்' பெ. சுந்தரனார்.



தமிழ்த்தாய் வாழ்த்து – பொருள்

ஒலி எழுப்பும் நீர் நிறைந்த கடலெனும் ஆடையுடுத்திய நிலமெனும் பெண்ணுக்கு, அழகு மிளிரும் சிறப்பு நிறைந்த முகமாகத் திகழ்கிறது பரதக்கண்டம். அக்கண்டத்தில், தென்னாடும் அதில் சிறந்த திராவிடர்களின் நல்ல திருநாடும். பொருத்தமான பிறை போன்ற நெற்றியாகவும், அதிலிட்ட மணம் வீசும் திலகமாகவும் இருக்கின்றன.

அந்தத் திலகத்தில் இருந்து வரும் வாசனைபோல அனைத்துலகமும் இன்பம் பெறும் வகையில் எல்லாத் திசையிலும் புகழ் மணக்கும்படி (புகழ் பெற்று) இருக்கின்ற பெருமைமிக்க தமிழ்ப் பெண்ணே! தமிழ்ப் பெண்ணே! என்றும் இளமையாக இருக்கின்ற உன் சிறப்பான திறமையை வியந்து உன் வயப்பட்டு எங்கள் செயல்களை மறந்து உன்னை வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே!



தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

'நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக்காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன்' என்று உளமார நான் உறுதி கூறுகிறேன்.

'ஒருபோதும் வன்முறையை நாடேன் என்றும், சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும் பூசல்களுக்கும் ஏனைய அரசியல் பொருளாதாரக் குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன்' என்றும் நான் மேலும் உறுதியளிக்கிறேன்.



உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் என் உடன் பிறந்தவர்கள். என் நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன். இந்நாட்டின் பழம்பெருமைக்காகவும் பன்முக மரபுச் சிறப்புக்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்து விளங்கிட என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன்; எல்லாரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.


என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலேதான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்.

முகவுரை

> *தமிழ் எங்கள் உயர்வுக்கு வான்! – இன்பத்*
> *தமிழ் எங்கள் அசதிக்குச் சுடர் தந்த தேன்! –* பாவேந்தர் பாரதிதாசன்.

தமிழ்நாட்டின் தனித்துவப் பண்பாடு, மொழி மற்றும் சமூக மரபை முன்னிறுத்தி தமிழ்நாடு மாநிலக் கல்விக் கொள்கை 2025 உருவாக்கப்பட்டுள்ளது. இது குழந்தைகளுக்கான கட்டாயத் தேவையாக, முக்கியமான ஒற்றைக்கூறாக அடிப்படை எழுத்தறிவைக் குறிப்பிடுகிறது; தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு குழந்தையும் வயதுக்கு ஏற்ற கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் உள்ளிட்ட வாழ்நாள் முழுமைக்குமான அடிப்படை மொழித்திறன்கள் பெறுவதை வலியுறுத்துகிறது. அனைத்துப் பாடங்களையும் கற்பதற்கான அடித்தளமாக மொழிப்பாடம் அமைவதால் குழந்தைகளின் உள்ளார்ந்த திறன்களைக் கண்டறியவும், மேம்படுத்தவும், சமூகத்தோடு இயைந்து வாழவும் வழிகாட்டும் வகையில் இப்பாடநூல் கட்டமைக்கப்பட்டுள்ளது.

துறுதுறுப்பும் எதையும் தேடித் துருவி அறிந்துகொள்ளும் குழந்தைகளின் இயல்புணர்ந்து அவர்களுக்குப் பிடித்தமான/நெருக்கமான மற்றும் அறிமுகமானவற்றைக் கொண்டே இந்நூலில் பாடங்கள், பயிற்சிகள், மொழி விளையாட்டுகள் போன்றவை பின்வருமாறு அளிக்கப்பட்டுள்ளன.



பாடக்கட்டமைப்பு

ஒவ்வொரு பாடமும் சிந்தனையைத் தூண்டும் வினாவுடன் தொடங்குகிறது. அந்த வினாவிற்கான விடைகளைக் குழந்தைகள் தாமாகவே தேடி அறியும் அணுகுமுறையில் பாடம் கட்டமைக்கப்பட்டுள்ளது. இதனால், மீளப்படித்தலும் பொருளுணர் திறனும் வலுப்பெறுகின்றன. குழந்தைகள் பெற வேண்டிய கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய அடிப்படை மொழித்திறன்களுக்கான பாடங்கள் பின்வருமாறு பாடநூலுள் அளிக்கப்பட்டுள்ளன.

அலகு 1

1. **நம் நினைவில்** (முதல் 15 நாள்களுக்கான செயல்பாடுகள்)
   - அடிப்படை ஆயத்தச் செயல்பாடுகள்.
2. **கோழி தேடும் கோலி** (படக்கதை)
   - கற்பனையைத் தூண்டிச் சிந்தித்தலை ஊக்குவிக்கும் பாடம்.
3. **மின்னி மின்னி...** (பாடல்)
   - ஓசை நயம் கொண்ட வருணனைப் பாடல்.

அலகு 2

4. **மீனுவின் வண்டி** (படக்கதை)
   - உறவுக்கான மனவெழுச்சியை வெளிப்படுத்தும் பாடம்.
5. **பூங்காவில் ஒரு நாள்** (படக்கதை)
   - அறிவிப்பைப் படித்துப் பொருள்புரிந்து கொள்ளுதல் சார்ந்த பாடம்.

அடிப்படைத் திறன்களை வளர்க்கும் பயிற்சிச் செயல்பாடுகள்

கேட்டல், பேசுதல்
கேட்டலைப் புரிந்துகொண்டு தம் மொழிநடையில் பேசுதல்

படித்தல்
பொருள்புரிந்தும் விரைந்தும் ஆர்வத்துடன் தேடிப் படித்தல்

எழுதுதல்
எழுத்துவழிப் படைப்பாற்றலை வெளிப்படுத்துதல்

பாடநூலில் கற்றவற்றை உறுதிப்படுத்தும் மதிப்பீடு

- கற்றவற்றை மீண்டும் நினைவுகூரும் பகுதி – திரும்பிப் பார்க்கலாம்
- கற்றல் விளைவுகளை மதிப்பிடும் பகுதி (சிந்தித்து விடையளித்தல், கதை கூறுதல், பாடல் பாடுதல்) – கற்றல் பயணம்
- குழந்தைகள் தாம் கற்றதை அறியும் பகுதி – நான் கற்றவை
- ஒவ்வொரு அலகிற்குமான வளரறி மதிப்பீடு – நானே செய்வேன்

ஆசிரியர் கையேடு



ஆசிரியர் குறிப்பு


தனி / இணை/ குழு/ ஆசிரியர் உதவியுடன் செயல்பாடுகள்

கதை, பாடல், பேசுதல், படித்தல், எழுதுதல் உத்திகள்


கற்றல் விளைவுகள்

கூடுதல் பாடப்பொருள் (பாடல், கதை, பயிற்சிகள்)


மதிப்பீட்டுக் கூறுகள் (Rubrics)

ஒலிவடிவில் பாடங்கள், காணொலி வடிவில் அசைவூட்டக் காட்சிகள், மின்னுரு பாடப்பொருள் (Digital content), மின்னூல் (e – Book), உள்ளடங்கிய மின்னூல் (i – Book) குழந்தைகளின் பாடம் சார்ந்த ஆர்வத்தைக் கூர்தீட்டும் வகையில் அளிக்கப்பட்டுள்ளன. இவை தன்னம்பிக்கையுடன் மொழியைப் பேச, படிக்க, எழுத, படைக்க வழிகாட்டும்.



நிறைவாக, ஒவ்வொரு குழந்தையும் வாழ்நாள் முழுமைக்குமான வலுவான, நிரந்தரமான கல்வி அடித்தளத்தைப் பெறுவதோடு, எந்தவொரு குழந்தையும் விடுபடாமல் சமவாய்ப்பினைப் பெற்று அடிப்படை எழுத்தறிவு என்னும் இலக்கினை அடைவதையே இப்பாடநூல் எதிர்நோக்குகிறது.

மூன்றாம் வகுப்பு


பருவம் - I

தமிழ்



பொருளடக்கம்

அலகு	தலைப்பு	பக்க எண்
1	1. நம் நினைவில்	2
	2. கோழி தேடும் கோலி	17
	3. மின்னி மின்னி...	32
2	4. மீனுவின் வண்டி	45
	5. பூங்காவில் ஒரு நாள்...	57







மின்னூல்

உள்ளடங்கிய மின்னூல்

ஆசிரியர் கையேடு



அலகு 1

1. நம் நினைவில்

என்னைப் பற்றி ...



வணக்கம்!



என் பெயர் : _____

எனக்குப் பிடித்தவரின் பெயர் : _____


எனக்குப் பிடித்த விளையாட்டு : _____



- என் வகுப்பில் எனக்குப் பிடித்தது
- வகுப்பில் மாற்ற விரும்புவது
- நான் விரும்பிச் செய்வது
- நான் கற்றுக்கொள்ள விரும்புவது

இன்று எனது உணர்வு





என்னை எனக்குப் பிடிக்கும். ஏனெனில், நான்

- ☐ நன்கு பழகுவேன்.
- ☐ நன்றாகப் பேசுவேன்.
- ☐ என் உணர்வைச் சொல்வேன்.
- ☐ பிறர் உணர்வுகளை மதிப்பேன்.
- ☐ உதவி செய்வேன்.
- ☐ நேரம் தவறமாட்டேன்.
- ☐ புதியதைத் தெரிந்துகொள்ள விரும்புவேன்.



அவரவருக்குப் பொருந்தும் குறிப்புகளுக்கு மட்டும் ✓ செய்ய வேண்டும்.

நான் தனித்துவம் உடையவர்.

என்னைப்போல யாரும் இல்லை.

இப்படிக்கு,

.....

நன்றி!



விண்ணில் வீடு கட்டலாம்

விண்ணிலொரு வீடுகட்டி
விளையாடி மகிழலாம்
விண்மீனை விளக்காக்கி
வீடெல்லாம் வைக்கலாம்!

வானவில்லில் தூளிகட்டி
ஊஞ்சலாக்கி ஆடலாம்
மழைத்துளியைச் சேகரித்து
மாலையாக மாற்றலாம்!

கதிரவனைக் கூட்டி வந்து
கண்ணாமூச்சி ஆடலாம்
வெண்ணிலவுப் படகிலேறி
விண்வெளியைச் சுற்றலாம்!

மேகமெல்லாம் சேர்த்தெடுத்து
மெத்தையாக்கித் தூங்கலாம்
வேண்டுமெனில் விடுப்பெடுத்து
பூமிவந்து பார்க்கலாம்!

ஆசிரியர் கையேடு

ஆசிரியர் கையேட்டில் உள்ள பாடல் உத்திகளைப் பயன்படுத்திப் பாடலாம்.

பிடித்ததை வரைக.









பிடிக்கலாம்... பிடிக்கலாம்...





ஆசிரியர் கையேடு

கவனத்தைக் குவித்துத் தாள்பந்தைப் பிடிக்க வேண்டும்.

பூக்களின் பெயர்களை வட்டமிட்டு எழுதுக.


ரோ	தா	சூ	ப்	ம	வ
ஜா	ழ	ரி	மு	ல்	லை
ண்	ம்	ய	த்	லி	அ
பூ	பூ	கா	து	கை	ல்
சா	ம	ந்	தி	ச்	லி
சி	ண	தி	அ	ர	ளி

1. தாழம்பூ
2. அரளி
3.
4.
5.
6.
7.
8.

வட்டமிடாத எழுத்துகளை எடுத்து எழுதுக.



முறைப்படுத்தி எழுதினால் கிடைக்கும் பூக்களின் நண்பர்:



தேவைப்படும் பொருள்களை உரிய இடத்தில் எடுத்து எழுதுக.



சர்க்கரை பால் குவளை கத்தி தண்ணீர் தீப்பெட்டி சீப்பு அடுப்பு தர்பூசணி கிண்ணம் தேயிலைத்தூள் துண்டு உணவு பற்பசை பல்துலக்கி போர்வை வடிகட்டி உடைகள் தின்பண்டம் புத்தகம் எழுதுகோல் பை

பழச்சாறு தயாரிப்பதற்கு...

சர்க்கரை,



தேநீர் தயாரிப்பதற்கு...

தண்ணீர்,



பள்ளி செல்வதற்கு...

பை,



சுற்றுலா செல்வதற்கு...

பை,



சொற்களை வண்ணமிட்டு எடுத்து எழுதுக.



குடம்,

தொடருக்கு ஏற்பச் சொல்லை மாற்றி எழுதுக.

1. செடியில் ஈக்கள் பூத்தன. : செடியில் பூக்கள் பூத்தன.

2. நான் செங்கல் உண்டேன். : _____

3. என் வட்டம் பறந்தது. : _____

4. ஆற்றில் தேன் துள்ளியது. : _____

5. தாழை இலையில் சாப்பிட்டேன். : _____


தொடர் அமைத்து எழுதுக.






விளையாடினர்.

நண்பர்கள் பந்து விளையாடினர்.




தின்கிறது.




ஏறுகிறது.




ஆடுகிறாள்.

நிரப்புக.



1. வானத்தில் _____ பறக்கின்றன.



2. தேன்கூட்டில் இருந்து _____ செல்கின்றன.



3. புல் தரையில் _____ நடந்து வருகிறது.


4. பூவில் _____ அமர்ந்துள்ளது.



அடிக்கடி வாங்க!


கதிரின் பாட்டி, தாத்தா உறவினர்களை அழைத்தனர்.
திருவிழாவிற்கு வாங்க...
அனைவரையும் பார்க்கலாம் வாங்க...
சித்தப்பா, சித்தி வந்து விட்டார்கள் அப்பா.
வா தம்பி! வா கவிதா!
உனது அக்கா வந்தாரே எங்கே?
தெரியவில்லையே!
பெரியம்மா தோட்டத்தில்தான் இருக்கிறார் அம்மா.


வணக்கம் வாங்க...
அப்பா, அம்மா வாங்க...
வணக்கம்.
அண்ணா இதை உங்களுக்காக வாங்கி வந்தேன்.
மலர், மிக்க மகிழ்ச்சி.
நன்றி அத்தை. அப்பாவுக்கும் பரிசா?
நன்றாகச் சாப்பிடுங்க.
ஒளிப்படம் எடுக்கலாமே!





கதிருக்கு என்ன உறவு? எழுதுக.

அம்மாவின் அண்ணன்
மாமா

அம்மாவின் அக்கா
_____

அம்மாவின் அம்மா
_____



கதிர்

அப்பாவின் தம்பி
_____

அம்மாவின் தங்கை
சித்தி

அப்பாவின் அண்ணன்
பெரியப்பா

அப்பாவின் தங்கை
_____

ஆசிரியர் கையேடு

உறவுமுறைகளைப் புரிந்துகொண்டு எழுத வேண்டும்.

கதையை வரிசைப்படுத்தி எழுதுக.

* குருவி பருத்திச் செடியிடம் பஞ்சு கேட்டது.
* குருவிக் குஞ்சுகள் குளிரில் நடுங்கின.
* ஒரு நாள் பனி அதிகமாக இருந்தது.
* குஞ்சுகள் மகிழ்ந்து தூங்கின.
* குருவி, மெத்தை செய்தது.
* பருத்திச் செடி பஞ்சு தந்தது.



1. ஒரு நாள் பனி அதிகமாக இருந்தது.

2. _____

3. _____

4. _____

5. _____

6. _____

சரி எனில் தவறு எனில் வண்ணமிடுக.





பிறரை ஏளனம் செய்யலாமா?





தவறு என்று உணர்ந்தால் மன்னிப்புக் கேட்கலாமா?





தவறு செய்வதைச் சுட்டிக்காட்டலாமா?



விழுமியம் / வாழ்வியல் திறன்களைப் பெறுவதற்கேற்பக் கலந்துரையாட வேண்டும்.



நான் கற்றவை



1. பொருள் உணர்ந்து சொற்களைப் படிக்க முடியும். ☐ ☆ ☆ ☆

2. மொழி விளையாட்டுகளில் ஈடுபட முடியும். ☐ ☆ ☆ ☆

3. உறவுமுறைகளை அறிந்து பயன்படுத்த முடியும். ☐ ☆ ☆ ☆

ஆசிரியர் கையேடு

கற்றுக்கொண்ட திறனுக்கு ✓ செய்ய வேண்டும்.
பெற்ற அடைவுக்கு ஏற்ப வண்ணமிட வேண்டும்.

நானும் படிப்பேன்; வண்ணமிடுவேன்



அ ஐ எ ஆ உள ஓ ஏ

உ இ ஒள ஒ ஈ



ஞ் ய் ழ் ன் ம் ண்

த் வ் ங் ர் ட் ற்

க் ல் ப் ள் ச் ந்



உன் என் ஊர் எள் ஆம்

உண் எண் ஏர் ஏன் ஓர்

உன் ஊர்

என் ஏர்

எள் உண்

ஓர் எண்



ஊர் ஊர்

உன் ஊர்

ஏர் ஏர்

என் ஏர்

உண் உண்

எள் உண்



அ ஆ இ ஈ உ உள எ ஏ ஐ ஒ ஓ ஔ

க் ங் ச் ஞ் ட் ண் த் ந் ப் ம் ய் ர் ல் வ் ழ் ள் ற் ன்









கண்டுபிடி... கண்டுபிடி...






சிறுமி வாங்கிச் சென்ற பொருள் எது? வட்டமிடுக.





பூங்காவில் இல்லாத நாய்க்குட்டி எது? வட்டமிடுக.



2. கோழி தேடும் கோலி


மழை எவ்வாறு பெய்கிறது? மேகம் குளிர்ந்து மழையாகப் பெய்கிறது. ஆனால், பொன்னி என்ன சொல்வாள் தெரியுமா? வானம் அழுகிறது! அதுதான் மழை என்பாள். அதற்குக் கற்பனையாக ஒரு காரணத்தையும் கண்டுபிடிப்பாள். அதைக் கதையாகக் கூறுவாள்.


கோழி, குப்பையை ஏன் கிளறுகிறது? இதற்கும் காரணம் சொல்கிறாள். அது என்ன காரணமாக இருக்கும்?




ஆசிரியர் கையேடு

எல்லோரும் கூறும் விடைகள் கதைக்குள் உள்ளதா? படித்துப் பார்க்கலாமா?




எங்கு இருந்தாலும் கோலியை எடுத்து வரும். கோழி, கோலியை எடுத்து வரும் அழகே அழகு!
ஒவ்வொரு முறையும் இப்படித்தான் எடுத்துத் தரும்.
இப்படியே கோழிக்கும் கோலிக்கும் நட்பு ஏற்பட்டது.
பீட்டர் இல்லாதபோது இரண்டும் விளையாடும்.
ஒரு நாள் கண்ணாமூச்சி விளையாடின.
1 2 3


அங்கே ஒளிகிறேன்.
கண்டுபிடிக்க வருகிறேன்...
இதோ உன்னைக் கண்டுபிடித்து விட்டேன்!
அடடா... கோலத்திலா உருண்டு வந்தேன்!
இப்போது நான் ஒளிந்து கொள்கிறேன்.
1 2 3
ஹா! ஹா! மாட்டிக்கொண்டாயா?



கோழி உண்மையில் குப்பையை / மண்ணை ஏன் கிளறுகிறது?


தெரிந்துகொள்ள வேண்டுமா?




பின்வரும் தொடரில் ஒவ்வொரு சொல்லிலும் உள்ள 1, 2, 3, 4 ஆவது எழுத்துகளை எடுத்து எழுத விடை கிடைக்கும்.

இன்று கீரை செய்தே உண்டிடலாம். _____

செய்கை விளையாட்டு



- கொக்...கொக்... கோழி என்று சொல்வேன்;
  கோழி போல் முன்னால் நடப்பேன்.
- டொக்... டொக்... கோலி என்று சொல்வேன்;
  பின்னால் நடப்பேன்.



செய்து பழகலாம்

1. பின்தொடர்ந்து படிக்க.



பாடத்தைப் படிக்கக் கேட்டும் ,

ஒலிப்பதிவைக் கேட்டும் பின்தொடர்ந்து படிக்கலாம்.

2. கதையில் பிடித்த சொற்களை எழுதுக.



1			6
2			7
3			8
4			9
5			10



தாம் எழுதிய அதே சொற்களை அதிக எண்ணிக்கையில் எழுதியது யார் என்பதைக் குழுவினருடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

ஆசிரியர் கையேடு

அதிகமான சொற்களை ஒன்றுபோல் எழுதிய நண்பர் :

ஒன்றுபோல் எழுதிய சொற்களின் எண்ணிக்கை :

3. பாடத்தில் அடிக்கோடிட்டு எழுதுக.



1. ஒரே ஓசையில் முடியும் சொற்கள் :

   அங்கே, _____, _____

2. கதையில் இடம்பெற்ற விளையாட்டுகள் :

   _____, _____

3. கதையில் பிடித்த தொடர் :

   _____

ஆசிரியர் கையேடு

உரிய விடைகளைப் பாடத்தில் கண்டுபிடித்து அடிக்கோடிட வேண்டும்.

4. பேசலாம்.

எனக்குப் பிடித்த விளையாட்டு...





ஆசிரியர் கையேடு

பிடித்த விளையாட்டு, விளையாடும் முறை, விளையாடிய அனுபவம் குறித்துப் பேச வேண்டும்.

5. படித்து விடை எழுதுக.



படித்தல் பலகை

ஓடி	அழகு	வந்தேன்	இருக்கிறாய்
கோலி	குரல்	வாங்கினான்	விளையாடும்
கோழி	நட்பு	கண்டுபிடித்து	உருண்டு

1. இரண்டு எழுத்துச் சொற்கள்: _____, _____, _____

2. உயிரெழுத்தில் தொடங்கும் சொற்கள்: _____, _____, _____, _____

3. இரண்டு மெய் எழுத்து உள்ள சொற்கள்: _____, _____, _____, _____

4. அதிக எழுத்துகள் உள்ள சொல்: _____

சொற்களை விரைந்து படிப்பேன்; வண்ணமிடுவேன்.



6. பாடச்சுருக்கம் – படிக்க; விடையளிக்க.



கோழி தேடும் கோலி

(பொன்னியின் கற்பனைக் கதை)



பீட்டர் கோழி, கோலி வாங்கினான்.
நண்பர்களுடன் கோலி விளையாடுவான்.
கோழி, கோலியை எடுத்துத் தரும்.
இரண்டும் நட்பாக இருந்தன.
ஒரு நாள் கண்ணாமூச்சி ஆடின.
கோலி குப்பைத்தொட்டி அருகே ஒளிந்தது.
காற்று வேகமாக வீசியது.
கோலியின் மேல் குப்பைகள் விழுந்தன.
கோழி, கோலியைத் தேடியது.
குப்பையைக் கிளறியது.
இப்போதும் தேடிக் கொண்டே இருக்கிறது.

படிக்க எடுத்துக்கொண்ட நேரம்

1. __ : __ 2. __ : __ 3. __ : __

ஆசிரியர் கையேடு

விரைவாகப் படித்து, ஒவ்வொரு முறையும் படித்த நேரத்தைக் குறிக்க வேண்டும்.

1. இரண்டும் நட்பாக இருந்தன – தொடரில் **இரண்டும்** என்ற சொல் எவற்றைக் குறிக்கிறது?

   பீட்டர், கோலி ☐ பீட்டர், கோழி ☐ கோழி, கோலி ☐

2. குப்பைகள் ஏன் கீழே விழுந்தன?

---

7. சொல்வதை எழுதுக.



ஆசிரியர் கையேடு

படித்தல் பலகையில் உள்ளவற்றைச் சொல்லக் கேட்டு எழுத வேண்டும்.

8. தொடர்புடைய சொல்லை எடுத்து எழுதுக.



பூக்கள் தேன் வண்ணம்

மீன் நண்டு கப்பல்

இனிப்பு தோட்டம் யானை

வானம் மேகம் குடை

மழை



கரும்பு



கடல்



வண்ணத்துப்பூச்சி



9. தொடர்ந்து எழுதுக.



கிளி பறக்கும் **வானம்**

வானம் பார்க்கும் பாப்பா

பாப்பா ஆடும் ஊஞ்சல்

ஊஞ்சல் இருக்கும் மரம்

மரம் தரும் பழம்



10. பேசலாம்; எழுதலாம்.



ஆசிரியர் கையேடு

படத்தைப் பார்த்துப் பேச வேண்டும்; தொடர்கள் எழுத வேண்டும்.

11. கேட்டு விடை கூறுக.

காற்றில் மணம்

மாறனின் குரல்கேட்டு விரைந்து வந்தார் அம்மா. விமலாவும் மாறனும் ஒரு பொம்மைக்காகச் சண்டை போட்டுக் கொண்டிருந்தனர். விமலா, தம்பியை அழ வைக்காதே! சேர்ந்து விளையாடுங்கள் என்று கூறிய அம்மா சமையல் அறைக்குள் ஓடினார். பின்னாலேயே ஓடிய விமலாவுக்கு ஏதோ ஒரு வேறுபட்ட மணம் வருவது தெரிந்தது. இது என்ன மணம் அம்மா? என்று கேட்டாள் விமலா. பால் பொங்கி அடுப்பு அணைந்துள்ளது. அதனால், எரிவாயு கசிந்து கொண்டிருக்கிறது எனச் சொல்லிக்கொண்டே எரிவாயுவை நிறுத்தினார் அம்மா. உடனே விமலா மின்விசிறியை இயக்கச் சென்றாள். வேண்டாம் விமலா... இப்போது மின் சாதனங்களை இயக்கக் கூடாது; அது விபத்தை ஏற்படுத்தும் என்றார் அம்மா. உடனடியாகக் கதவு, சன்னல்களைத் திறந்துவிட்டார். அங்கிருந்து இருவரையும் வெளியே அழைத்து வந்தார். பதற்றம் இல்லாமல் எச்சரிக்கையுடன் செயல்பட்ட அம்மாவை அன்பாகப் பார்த்தாள் விமலா.

சரியான தொடர் எது? காரணம் கூறுக.

அ) விமலா, எரிவாயு கசியும்போது ஏற்படும் மணத்தை இப்போதுதான் கண்டுபிடிக்கத் தெரிந்துகொண்டாள். ☐

ஆ) விமலா, எரிவாயு கசியும்போது ஏற்படும் மணத்தை முன்னரே கண்டுபிடிக்கத் தெரிந்திருந்தாள். ☐

12. சிந்தித்து விடையளிக்க.



- நான் ஒரு கோழி.
- இரையைக் கொத்தித் தின்கிறேன்.
- கூடை அருகில் இருக்கிறேன்.

மூன்று தொடர்களுக்கும் உரிய ஒரு படம் எது?







13. படித்து விடை எழுதுக.



எங்கே போனது?

அட, எங்கே போனது? தாத்தா தேடினார். மேசையின் மீது பார்த்தார். அங்கு இல்லை. புத்தகங்களுக்கு அருகில் பார்த்தார். அங்கும் இல்லை. அறை முழுவதும் தேடினார். எங்குமே இல்லை. எங்கேதான் போனது? எனச் சோர்ந்து நாற்காலியில் அமர்ந்தார். பூவிழி அங்கே வந்தாள். என்ன ஆனது தாத்தா? எனக் கேட்டாள். என் மூக்குக் கண்ணாடியைக் காணவில்லை என்றார். ஹா...ஹா... எனச் சிரித்தாள் பூவிழி. தாத்தா உங்கள் நெற்றிக்கு மேல் தொட்டுப் பாருங்கள் என்றாள். தலையைத் தொட்டுப் பார்த்தார் தாத்தா. அவருக்கும் சிரிப்போ சிரிப்பு. ஏன் என்று உங்களுக்குத் தெரியுமா?

1. தாத்தாவின் மூக்குக் கண்ணாடி எங்கே இருந்தது?

மேசை மேல் ☐

புத்தகத்தின் மேல் ☐

தாத்தாவின் நெற்றிக்கு மேல் ☐

2. சரியா? தவறா? ✓ செய்க.

மூக்குக் கண்ணாடியைத் தாத்தாவே கண்டுபிடித்தார். சரி ☐ தவறு ☐

14. பின்பற்றி எழுதுக.



பீட்டருக்குப் பிடித்தவை...

- சுட்டிக் கோழியைப் பிடிக்கும்.
- படம் வரையப் பிடிக்கும்.
- தாத்தா, பாட்டி வீட்டிற்குச் செல்லப் பிடிக்கும்.



எனக்குப் பிடித்தவை...



உயிரெழுத்துகள் - 12

அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ

குறில் எழுத்துகள் - 5

அ இ உ எ ஒ

நெடில் எழுத்துகள் - 7

ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ

வண்ணமிட்டுப் பெயர் எழுதுக.



ஒன்று

ஆசிரியர் கையேடு

குறில், நெடில் வேறுபாடு அறிந்து ஒலித்துப் பார்க்க வேண்டும்.

மெய் எழுத்துகள் – 18

க் ச் ட் த் ப் ய் ல் ழ் ற்
ங் ஞ் ண் ந் ம் ர் வ் ள் ன்

வல்லின மெய்கள் – 6

க் ட் ப்
ச் த் ற்


மெல்லின மெய்கள் – 6

ங் ண் ம்
ஞ் ந் ன்

இடையின மெய்கள் – 6

ய் ல் ழ்
ர் வ் ள்


வண்ணமிட்டுத் தொடர்கள் அமைத்து எழுதுக.



1. வாத்து குளத்தில் நீந்துகிறது.

15. நீங்கள் விளையாடிய விளையாட்டுகளுக்கு ✓ செய்க.





கோலி ☐




மட்டைப்பந்து ☐



கண்ணாமூச்சி ☐



பல்லாங்குழி ☐



கபடி ☐



ஓடிப்பிடித்தல் ☐



சக்கரம் உருட்டுதல் ☐



பம்பரம் விடுதல் ☐

ஆசிரியர் கையேடு

அவரவர் விளையாடிய விளையாட்டைப் பற்றி நண்பர்களுடன் பேச வேண்டும்.

16. சொல்லிப் பழகுக.



- தென்னை மரத்தில் இளநீர்
  தேங்காய் உள்ளே தண்ணீர்
- காற்றில் பறந்த கீற்று
  சேற்று வயலில் நாற்று
- குழியில் விழுந்த வாளி
  வாளிக்குள்ளே கோலி

ஆசிரியர் கையேடு

மீண்டும் மீண்டும் ஒலித்துப் பழக வேண்டும்.



கற்றல் பயணம்

படைப்பு நேரம்.

கற்பனை செய்து கதையைக் கூறுக.

- கோழி குப்பையைக் கிளறுவதற்கு
  வேறு கதையை உருவாக்கிக் கூறலாம்.
- வண்ணத்துப் பூச்சிக்குப் பல வண்ணங்கள்
  கிடைத்தது எப்படி?
- தேங்காய்க்குள் தண்ணீர் எப்படி வந்தது?

கற்பனைக் கதையை உருவாக்கிக்
குழுவில் பகிரலாம்.





நான் கற்றவை



1. கதையின் முடிவை மாற்றிக் கூற இயலும். ☐
2. படம் பார்த்துப் பேசத் தெரியும். ☐
3. குறில், நெடில் வேறுபாடு அறிந்து ஒலிக்க முடியும். ☐

ஆசிரியர் கையேடு

கற்றுக்கொண்ட திறனுக்கு ✓ செய்ய வேண்டும்.
பெற்ற அடைவுக்கு ஏற்ப வண்ணமிட வேண்டும்.

3. மின்னி மின்னி...



மின்னும் மின்மினி போலவே
மின்னி மின்னி வானத்தில்
என்னை உற்றுப் பார்த்திடும்
சின்னச் சின்ன மீன்களே
என்ன அங்கே செய்கின்றீர்?
எப்படித் தான் நிற்கிறீர்?

அன்னை கழுத்தில் அணிந்திடும்
அழகு வைர மாலையில்
மின்னும் மணிகள் போலவும்
வெள்ளை முத்தைப் போலவும்
பொன்னுப் பூவைப் போலவும்
மின்னிச் சிரிக்கும் மீன்களே

எட்ட நின்று பார்க்கிறீர்
இரவில் மேலே வருகிறீர்
பட்டப் பகலில் எங்குதான்
பறந்து செல்வீர் கூறுங்கள்!

–பெ. தூரன்.





ஆசிரியர் கையேட்டில் உள்ள பாடல் உத்திகளைப் பயன்படுத்திப் பாடலாம்.

செய்து பழகலாம்

1. பாடலில் பிடித்த சொற்களை எழுதுக.



1 _____ 6 _____

2 _____ 7 _____

3 _____ 8 _____

4 _____ 9 _____

5 _____ 10 _____



தாம் எழுதிய அதே சொற்களை அதிக எண்ணிக்கையில் எழுதியது யார் என்பதைக் குழுவினருடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

ஆசிரியர் கையேடு

அதிகமான சொற்களை ஒன்றுபோல் எழுதிய நண்பர் : _____

ஒன்றுபோல் எழுதிய சொற்களின் எண்ணிக்கை : _____

2. பாடலில் அடிக்கோடிட்டு எழுதுக.



1. ஒரே ஓசையில் முடியும் சொற்கள் :

   நிற்கிறீர், _____, _____

   சின்ன, _____

2. பாடலில் புதிதாகத் தெரிந்துகொண்ட சொற்கள் :

   _____

ஆசிரியர் கையேடு

உரிய விடைகளைப் பாடலில் கண்டுபிடித்து அடிக்கோடிட வேண்டும்.

3. தொடர் எழுதுக.

நல்ல நண்பன்



என் நீ

நீ என் நல்ல நண்பன்

1 2 3 4



வருவோம் வாங்கி



பலா வா

_____

நீல பூத்தது

ஐ!



___ ___ ___

_____

ஐ!



___ ___ ___

___ ___ ___ ___

_____

4. தொடர்ந்து எழுதுக.





தேடித் தேடித் தேனீ வந்தது.



பறந்து பறந்து பருந்து வந்தது.



வளைந்து வளைந்து வண்டு வந்தது.

மின்னி மின்னி மின்மினி வந்தது.



_____

_____

_____



பாடிப் பாடிப் பாப்பா வந்தாள்.



ஓடி ஓடி



நகர்ந்து நகர்ந்து



ஆடி ஆடி

5. சிந்தித்து விடையளிக்க.





அம்மா, வெள்ளரிக்காய் மிகவும் சுவையாக இருக்கிறது.

அப்படியா முகிலா, இதை நான் விளையும் இடத்திலேயே வாங்கினேன்.



அம்மா, வெள்ளரிக்காய் வாங்கிய இடம் எது?



சந்தை ☐



காய்கறிக் கடை ☐



தோட்டம் ☐

6. பின்பற்றி எழுதுக.



பாப்பாவின் பொழுதுபோக்கு...

- பாட்டுப் பாடுவேன்.
- பாட்டுக் கேட்பேன்.
- நடனம் ஆடுவேன்.



எனது பொழுதுபோக்கு...

7. செயல்திட்டம் – பொம்மை செய்து காட்சிப்படுத்தலாம்.



ஆசிரியர் கையேடு

அந்தந்தப் பகுதிகளில் கிடைக்கும் பொருள்களைக்கொண்டு பொம்மை செய்ய வேண்டும். பொம்மை செய்தது பற்றிப் பேச வேண்டும்.

8. பிடித்த செயல்பாடு எது? ✓ செய்க; பேசுக.



☐



படிக்க எடுத்துக்கொண்ட நேரம்

1. ☐ : ☐ 2. ☐ : ☐ 3. ☐ : ☐

☐



☐

1. பாடலில் பிடித்த சொற்களை எழுதுக.



1			6
2			7
3			8
4			9
5			10



தாம் எழுதிய அதே சொற்களை அதிக எண்ணிக்கையில் எழுதியது யார் என்பதைக் குழுவினருடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

☐

கற்றல் பயணம்



படைப்பு நேரம்.



- மின்னி மின்னி... பாடலுக்கு ஒவ்வொரு குழுவினரும் ஒவ்வோர் இராகம் அமைத்துப் பாடலாம்.



நான் கற்றவை



1. பாடலைப் பிடித்த இராகத்தில் பாடத் தெரியும். ☐ ☆ ☆ ☆
2. சிந்தித்து விடைகூற முடியும். ☐ ☆ ☆ ☆
3. படித்ததைப் புரிந்துகொண்டு விடை அளிக்க முடியும். ☐ ☆ ☆ ☆



கற்றுக்கொண்ட திறனுக்கு ✓ செய்ய வேண்டும்.
பெற்ற அடைவுக்கு ஏற்ப வண்ணமிட வேண்டும்.

திரும்பிப் பார்க்கலாம்

அடுத்து என்ன நடந்திருக்கும்?



குருவியே பிடித்து இருக்கலாம்.

அதுவே பறந்து இருக்கலாம்.

குரங்கு வாலால் பிடித்து இருக்கலாம்.

நாங்கள் பல முடிவுகளைக் கூறினோம்.



நீங்கள் பல முடிவுகளைக் கூறுங்கள்!



சொல்லைக் கண்டுபிடிக்க.

- இது மூன்று எழுத்துப் பெயர்.
- இறுதி இரண்டு எழுத்து நாய்.
- இது ஒரு விலங்கு.

ஓநாய்

நாங்கள் கண்டுபிடித்தோம்.

நீங்கள் கண்டுபிடியுங்கள்!

- இது நான்கு எழுத்துப் பெயர்.
- இறுதி இரண்டு எழுத்து நீர்.
- தென்னை மரத்தில் கிடைக்கும்.

உரிய எழுத்தை எழுதுக.

குற்றியலிகரம்

மெல்லின மெய் எழுத்தை எழுதுக.

பழம்

நாங்கள் எழுதினோம்.

நீங்கள் எழுதுங்கள்!

நெடில்

நெடில் எழுத்தை எழுதுக.

_____ப்பம்

படத்திற்குப் பொருத்தமான தொடர்களைக் கண்டுபிடிக்க.



கன்றுக்குட்டி,

- துள்ளிக் குதிக்கிறது. ☑
- புல் மேய்கிறது. ☐
- ஒளிந்திருக்கிறது. ☐
- மரத்தின் கீழே உள்ளது. ☑

நாங்கள் கண்டுபிடித்தோம்.

நீங்கள் கண்டுபிடியுங்கள்!

கிளி,

- வானில் பறக்கிறது. ☐
- கிளையில் அமர்ந்து உள்ளது. ☐
- பழம் தின்கிறது. ☐
- வீட்டின் மேலே உள்ளது. ☐



நானும் படிப்பேன்: வண்ணமிடுவேன்






ண ம ஞ ப க ந

ச ட ங ல ள ன

ழ ர ற த வ ய



கடல்	பகல்	நடனம்	சக்கரம்
நலம்	வயல்	ஏற்றம்	மன்னன்
சரம்	மணல்	பள்ளம்	பழங்கள்
பணம்	தந்தம்	உலகம்	வணக்கம்



வனம்

அடர்ந்த வனம்

மரங்கள் அடர்ந்த வனம்

வயல்

அண்ணன் வயல்

என் அண்ணன் வயல்

வனம் தந்த மரம்.

மரம் தந்த மலர்.

மலர் தந்த பழம்.

பழம் தந்த வனம்.



அண்ணன் தந்த பம்பரம்.

மகள் தந்த அப்பளம்.

என் நல்ல நண்பன்.

மஞ்சள் வண்ண ஊஞ்சல்.











நானும் படிப்பேன்; வண்ணமிடுவேன்





ஙா மா தா லா கா ழா

றா டா னா பா ளா யா

ஞா ரா ணா சா வா நா



நாய்	தாளம்	காந்தம்	வளாகம்
யார்	பாடம்	சாம்பல்	நாணயம்
பலா	இறால்	பாயசம்	ஏலக்காய்
சாரல்	வானம்	நாடகம்	தாழ்ப்பாள்

மரம்

பலா மரம்

காய்த்த பலா மரம்



பாடலாம்

பாடல் பாடலாம்

நாம் பாடல் பாடலாம்

பாலம் பாலம் மரப்பாலம்.

கால் கால் வாய்க்கால்.

மரம் மரம் மாமரம்.

மான் மான் அந்தமான்.





என் மாமா வந்தார்.

அந்தப் பாப்பா யார்?

கப்பல் பார்க்கலாம் வா!

அம்மா பழங்கள் தந்தார்.









நானே செய்வேன்



1. கேட்டு விடை கூறுக.

நீலகிரி மலையில் பொன்னூர் என்ற கிராமம் உள்ளது. அங்கே தேயிலைத் தோட்டம் உள்ளது. விடுமுறை நாள்களில் தோட்டத்தின் பாதையில் குழந்தைகள் ஓடிப்பிடித்து விளையாடுவர். துண்டின் இருபுறம் பிடித்து ஓடை நீரில் மீன் பிடிப்பர். தீக்கொன்றை மரத்தின் மொட்டுகளைப் பறிப்பர். அதன் பச்சைத் தோலை நகம்போல் வைத்துக்கொள்வர். குறிஞ்சிப் பூக்கள் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மலரும். அந்த மலர்களைச் சேகரிப்பர். புத்தகத்தில் வைத்து உலர்த்திப் பாதுகாப்பர்.





பொன்னூர் கிராமக் குழந்தைகள், விடுமுறை நாள்களில் என்னவெல்லாம் செய்தனர்?

2. படித்துக்காட்டுக.

கூடை
அறை
கோழி
கோலி
குப்பை

பகல்
கபடி
முத்து
ஓநாய்
அழகு

நண்பர்
ஊஞ்சல்
வீசியது
மின்மினி
வானவில்

பூக்கள்
இளநீர்
தேடியது
தோட்டம்
நாற்காலி

சிரிக்கும்
விழுந்தன
ஒளிகிறேன்
கிளறுகிறது
கண்ணாமூச்சி

ஆசிரியர் கையேடு

நிறுத்தாமல் எத்தனை சொற்களைப் படிக்க முடிகிறது? நண்பர்களுடன் போட்டியிட்டுப் படிக்கலாம்.

3. படித்து விடையளிக்க.

1. **நெடில் எழுத்தில் தொடங்கும் சொற்களை எடுத்து எழுதுக.**

அடை

ஏலக்காய்

_____

_____

ஆவணி

இடியாப்பம்

2. **மூன்று தொடர்களுக்கும் பொருந்தும் ஒரே படம் எது?**

- தோட்டத்தில் செடி
- செடியில் பூ
- பூவில் வண்டு





3. **விடை எழுதுக.**

பூனைக்குப் பயந்து எலி பானைக்குள் நுழைந்தது.



அ) பானைக்குள் நுழைந்தது எது? _____

ஆ) பயந்தது எது? _____

4. **அடுத்து வரும் தொடர் எது? எடுத்து எழுதுக.**

மரம் தந்த பூ

பூ தந்த காய்

காய் தந்த பழம்

அ) பழம் தந்த மேகம்

ஆ) பழம் தந்த விதை

இ) பழம் தந்த வீடு

_____

5. **அடுத்து என்ன செய்யலாம்?**






- மிதக்க விடலாம். ☐
- பறக்க விடலாம். ☐
- உருட்டி விடலாம். ☐

மகிழ் பக்கம்




உரிய இடத்திற்குக் கோடிட்டு இணைக்கலாம்.





செய்து காட்சிப்படுத்தலாம்.









அலகு 2

4. மீனுவின் வண்டி

மீனுவுக்குப் புதிய மிதிவண்டி கிடைத்தது. அவள் துள்ளிக் குதித்தாள்; சிரித்தாள்; மகிழ்ந்தாள். இதனைப் பழைய மூன்று சக்கர வண்டி பார்த்தது. அது என்ன நினைத்து இருக்கும்?



ஆசிரியர் கையேடு


எல்லோரும் கூறும் விடைகள் பாடத்திற்குள் உள்ளதா? படித்துப் பார்க்கலாமா?



உனக்கு மூன்று வயது இருக்கும். முதல் முறையாகச் சந்தித்தோம். என் மேல் ஏறி அமர்ந்தாய். பிறகு என்ன செய்தாய் தெரியுமா?



நீயாக ஓட்டத் தொடங்கினாய். ஒருமுறை இருவரும் விழுந்தோம். என் கண்ணில் கண்ணீர். நீயோ சிரித்தாய். நீ துணிச்சலான பெண்தான்!





ஒரு நாள் மழை பெய்தது. "மழையில் ஓட்டாதே!" என்றார் பாட்டி. நீ கேட்கவே இல்லை. இருவரும் மழையில் நனைந்தோம். என் சக்கரங்களில் சேறு அப்பியது. மழை நீரில் கவிழ்ந்தேன். நீ என்ன சொன்னாய் தெரியுமா?




மிதுன் உன் நண்பன். அவனும் உன்னுடன் வண்டி ஓட்டுவான். இருவரும் போட்டி போட்டு ஓட்டினீர்கள். அப்போது என்ன நடந்தது? சிரித்துச் சிரித்து என் சக்கரமே கழன்று போனது!



இரவில் நீ தூங்குவாய். நாம் இருவரும் தெருவில் செல்வதாக நான் கற்பனை செய்வேன். நானே என் மணியை மெதுவாக அழுத்துவேன். "டிரிங்... டிரிங்..." நீ சிரிப்பாய். நானும் சிரிப்பேன். என் சக்கரத்தில் வரும் "கிர்ர்ர்... கிர்ர்ர்..." சத்தம்தான் என் சிரிப்பு!

என்னிடம்தான் ஓட்டிப் பழகினாய். இப்போது நீ வளர்ந்துவிட்டாய். புதிய மிதிவண்டியில் செல்கிறாய். அதில் எனக்கு மகிழ்ச்சியே! நான் பழைய பொருள் ஆகிவிட்டேன். இனி உன் நினைவுகளோடு இருப்பேன்.

பழைய பொருள்கள் இருக்கும் கடைக்குச் செல்கிறேன். போய் வருகிறேன் டா... டா...





அடுத்து என்ன நடந்திருக்கும்?

பழைய பொருள்களை ஏற்றிச் செல்லும் வண்டி நகரத் தொடங்கியது. மீனு அங்கே வந்தாள். அப்போது மூன்று சக்கர வண்டி சிரித்தது. ஏன்? என்ன நடந்தது?

அதைத் தெரிந்துகொள்ள வேண்டுமா?

ஒவ்வொரு தொடரிலும் உள்ள 1, 2, 3, 4, 5 ஆவது சொற்களுக்கு அடிக்கோடு இடுங்கள். விடை கிடைக்கும்.


1. மீனு கேட்டது கிடைத்தது.
2. அவள் ஓடிவந்து பார்த்தாள்.
3. புதிய மிதிவண்டியைத் தொட்டுப்பார்த்து மகிழ்ந்தாள்.
4. மீனு, அப்பா அம்மாவிற்கு டா... டா... கூறினாள்.
5. நண்பர்களிடம் தனது புதிய மிதிவண்டியைக் காட்டினாள்.

விடை





செய்கை விளையாட்டு



'வண்டி... வண்டி... மிதிவண்டி' என்று சொல்வேன்.

மிதிவண்டி ஓட்டுவதுபோல் செய்வேன்.

செய்து பழகலாம்

1. பின்தொடர்ந்து படிக்க.



பாடத்தைப் படிக்கக் கேட்டும் ,

ஒலிப்பதிவைக் கேட்டும் பின்தொடர்ந்து படிக்கலாம்.

2. கதையில் பிடித்த சொற்களை எழுதுக.



1			6
2			7
3			8
4			9
5			10



தாம் எழுதிய அதே சொற்களை அதிக எண்ணிக்கையில் எழுதியது யார் என்பதைக் குழுவினருடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

ஆசிரியர் கையேடு

அதிகமான சொற்கள் ஒன்றுபோல் எழுதிய நண்பர் :

ஒன்றுபோல் எழுதிய சொற்களின் எண்ணிக்கை :



3. பாடத்தில் அடிக்கோடிட்டு எழுதுக.

1. அருகருகே வந்துள்ள ஒரே எழுத்து, ஒரே சொல் :

ஆ... ஆ...

டிரிங்... டிரிங்...

2. பாடத்தில் பிடித்த தொடர் :

ஆசிரியர் கையேடு

உரிய விடைகளைப் பாடத்தில் கண்டுபிடித்து அடிக்கோடிட வேண்டும்.

4. பேசலாம்.

எனக்குப் பிடித்த பொருள்...



ஆசிரியர் கையேடு

முன்பு பயன்படுத்தி இப்போது பயன்படுத்த இயலாத பிடித்த பொருளுக்கும் தனக்குமான அனுபவத்தைப் பேச வேண்டும் .

5. படித்து விடை எழுதுக.



படித்தல் பலகை

மிதிவண்டி	பாட்டி	செல்கிறேன்	கற்பனை
அப்பா	சேறு	ஆடு	சிரிப்பு
குதித்தாள்	நீச்சல்	மாமா	வளர்ந்து
மழை	நண்பன்	இரவில்	பொருள்

1. இது ஒரு விலங்கு: _____

2. தண்ணீருடன் தொடர்புடைய சொற்கள்: _____, _____

3. அதிக எழுத்துகளைக் கொண்ட சொற்கள்: _____,

_____, _____, _____

4. படித்தல் பலகையில் உள்ள பிடித்த சொல்லைக் கொண்டு தொடர் எழுதுக.

_____

சொற்களை விரைந்து படிப்பேன்; வண்ணமிடுவேன்.

6. பாடச்சுருக்கம் – படிக்க: விடையளிக்க.



மீனுவின் வண்டி



அது ஒரு மூன்று சக்கர வண்டி.
மீனு சிறு வயதில் ஓட்டினாள்.
ஒரு நாள் வண்டியுடன் விழுந்தாள்.
ஒரு நாள் மழை நீரில் கவிழ்ந்தாள்.
நண்பருடன் வேகமாக ஓட்டினாள்.
ஆட்டின் மேல் மோதினாள்.
இப்போது மீனு வளர்ந்து விட்டாள்.
புதிய மிதிவண்டி வாங்கினாள்.
மகிழ்ந்தாள்; துள்ளிக்குதித்தாள்.
அதை மூன்று சக்கர வண்டி பார்த்தது.
பழையதை நினைத்து மகிழ்ந்தது.
பழைய பொருள்கள் கடைக்குச் சென்றது.



படிக்க எடுத்துக்கொண்ட நேரம்

1.  __ : __
2.  __ : __
3.  __ : __



விரைவாகப் படித்து, ஒவ்வொரு முறையும் படித்த நேரத்தைக் குறிக்க வேண்டும்.

1. நினைத்துப் பார்த்து மகிழ்ந்தது எது?

மீனு ☐ மூன்று சக்கர வண்டி ☐ புதிய மிதிவண்டி ☐

2. மூன்று சக்கர வண்டி, பழைய பொருள்கள் கடைக்குச் சென்றது ஏன்?

_____

7. சொல்வதை எழுதுக.





படித்தல் பலகையில் உள்ளவற்றைச் சொல்லக் கேட்டு எழுத வேண்டும்.

8. சொல்லைக் கண்டுபிடிக்க.



மரத்தின் ஓரம் உரல்	ர	ஆமை பொம்மை அருமை	
பொரித்த பொரி பொட்டலம்		கரும்பு தின்னும் எறும்பு	
நாகத்தைக் கண்ட காகம்		எட்டிப் பிடித்த காற்றாடி	

எழுத்துகளை முறைப்படுத்தினால் கிடைக்கும் சொல் _____.

9. தொடர்ந்து எழுதுக.



கூடை கூடை
என்ன கூடை ?
பூக்கூடை

என்ன பூ ?
சாமந்திப்பூ

என்ன சாமந்தி ?
மஞ்சள் சாமந்தி

என்ன மஞ்சள் ?
கிழங்கு மஞ்சள்

என்ன கிழங்கு ?
உருளைக்கிழங்கு



மயில் மயில்

_____?

வண்ண மயில்

என்ன வண்ணம் ?

_____

_____?

இலைப் பச்சை

10. பேசலாம்; எழுதலாம்.



ஆசிரியர் கையேடு

படத்தைப் பார்த்துப் பேச வேண்டும்; தொடர்கள் எழுத வேண்டும்.
(விழுமியம் / வாழ்வியல் திறன்களைப் பெறுவதற்கேற்பக் கலந்துரையாட வேண்டும்.)



11. சிந்தித்து விடையளிக்க.

மீனு பள்ளிக்கு நடந்து சென்றாள். அவள் வீட்டு வயல் ஓரத்தில் பலா மரம் இருந்தது. அதில் பழங்கள் நிறைய இருந்தன. நாளை பறிக்கலாம் என நினைத்தாள்.

உரிய படத்தை ✓ செய்க.



☐



☐



☐



12. பின்பற்றி எழுதுக.



மீனு விரும்பிச் செய்பவை...

- மிதிவண்டி ஓட்டுவேன்.
- ஊரைச் சுற்றிப் பார்ப்பேன்.
- நண்பர்களோடு விளையாடுவேன்.

நான் விரும்பிச் செய்பவை...


_____

_____

_____

_____

13. தொடர் அமைத்துக் கூறுக.



எதிர்ச்சொற்கள் அறிவோம்.

சில × பல	இரவு × பகல்	புதிய × பழைய
புகழ் × இகழ்	அருகில் × தொலைவில்	சிரிப்பு × அழுகை
அதிகம் × குறைவு	வேகமாக × மெதுவாக	காய் × கனி

எதிர்ச்சொற்களை நிரப்புக.

1. புதிய மிதிவண்டி வாங்கினாள். பழைய வண்டி பார்க்கிறது.

2. இரவு நீ தூங்குவாய். _____ நேரத்தில் விழித்திருப்பாய்.

3. மிதிவண்டியை வேகமாக ஓட்டினாள். _____ நிறுத்தினாள்.

4. விழுந்தபோது, வண்டிக்கு அழுகை வந்தது. மீனுவுக்குச் _____ வந்தது.



கற்றல் பயணம்

1. படைப்பு நேரம்.



- மீனுவின் வண்டி பாடத்தின் கதையைக் கூறலாம்.
- பழைய பொருள் ஒன்றை வரைந்து அது பேசுவது போல் எழுதிக் காட்சிப்படுத்தலாம்.

2. பொருத்தமானதை ✓ செய்து காரணம் கூறுக.



தண்ணீர்க் குடுவைக்கு உணர்வு இருந்தால் என்ன வெளிப்படுத்தி இருக்கும்? ஏன்?

மகிழ்ச்சி ☐ வருத்தம் ☐ பயம் ☐

இன்று முதல் நான் என் பொருள்களை,

- பாதுகாப்பாக வைத்துக்கொள்வேன். ☐
- பயன்படுத்தியதும் உரிய இடத்தில் வைப்பேன். ☐
- பிறருக்குக் கொடுத்து உதவுவேன். ☐
- முழுமையாகப் பயன்படுத்துவேன். ☐

விழுமியம் / வாழ்வியல் திறன்களைப் பெறுவதற்கேற்பக் கலந்துரையாட வேண்டும்.



நான் கற்றவை



1. படித்த கதையைச் சொல்லத் தெரியும். ☐ ☆☆☆
2. எதிர்ச்சொற்களைக் கண்டுபிடிக்கத் தெரியும். ☐ ☆☆☆
3. படம் பார்த்துப் பேச, எழுதத் தெரியும். ☐ ☆☆☆

ஆசிரியர் கையேடு

கற்றுக்கொண்ட திறனுக்கு ✓ செய்ய வேண்டும்.
பெற்ற அடைவுக்கு ஏற்ப வண்ணமிட வேண்டும்.


5. பூங்காவில் ஒரு நாள்...

மீனுவும் மிதுனும் பூங்காவிற்குச் சென்றனர். அங்கு அவர்கள் எதிர்பாராத செயல்களைச் செய்தனர். அப்படி என்ன செய்திருப்பார்கள்?



ஆசிரியர் கையேடு

எல்லோரும் கூறும் விடைகள் பாடத்திற்குள் உள்ளதா? படித்துப் பார்க்கலாமா?






எட்டு... ஒன்பது... பத்து...
பத்து குதி
ஆனால், ஏன் குதிக்க வேண்டும்?
பத்து முறை குதித்துவிட்டோம்!
வரி யில் நிற்கவும்
இந்தச் சிறிய வரிக்குள் நிற்க வேண்டுமாம்!
வரிக்குள் நிற்பதால் என்ன பயன்?
வா மிதுன் நின்று பார்க்கலாம்.
தரையில் நடக்கக் கூடாதா?
தரையில் நடக்காதீர்
இப்படி நடப்பது கடினமாக இருக்கிறதே!
ஏன் இப்படி நடக்க வேண்டும்?


பைகளை இங்கே போடவும்
நம் பைகளை இதற்குள் போட வேண்டுமா? ஏன்?
ஏதாவது போட்டி நடக்கிறதோ?
குப்பைத் தொட்டியிலா?
தை வளைந்து செல்கிற து
எல்லா அறிவிப்பும் குழப்பமாக இருக்கிறதே!
என்ன? தை வளைந்து செல்கிறதா!
தை மாதம் எப்படி அண்ணா வளைந்து செல்லும் ?
தை வளைந்து செல்கிற து
மெதுவாக ச் சொல்லுங்கள்
ஏன் இவ்வளவு மெதுவாகப் பேசுகிறாய்?
என்னவாக இருக்கும்?
இங்கே பாருங்கள்!

காற்று வேகமாக வீசியதில் சில எழுத்துகள் விழுந்துவிட்டன. சில வேறு இடத்தில் ஒட்டிக்கொண்டன. சரி செய்யப் போகிறேன்.







அட, இப்போது புரிகிறது!

நிரப்பிப் படிக்கலாம்.



குவி புபா சை கல் ப்

வரி□யில் நிற்கவும்

□ பத்துப் பகுதி


□□ தரையில் நடக்காதீர்

வா□னம் நிறுத்தும் இடம்

□ தை வளைந்து செல்கிறது

□□ பைகளை இங்கே போடவும்


செய்கை விளையாட்டு





குதி... குதி... பத்து குதி

- குதி... குதி... பத்து குதி என்று சொல்வேன்; குதிப்பேன்.



வளை... வளை... வளைந்து செல்

- வளை... வளை... வளைந்து செல் என்று சொல்வேன்; வளைந்து வளைந்து நடப்பேன்.

செய்து பழகலாம்

1. பின்தொடர்ந்து படிக்க.



பாடத்தைப் படிக்கக் கேட்டும் ,

ஒலிப்பதிவைக் கேட்டும் பின்தொடர்ந்து படிக்கலாம்.

2. கதையில் பிடித்த சொற்களை எழுதுக.



1 _____ 6 _____

2 _____ 7 _____

3 _____ 8 _____

4 _____ 9 _____


5 _____ 10 _____



தாம் எழுதிய அதே சொற்களை அதிக எண்ணிக்கையில் எழுதியது யார் என்பதைக் குழுவினருடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

அதிகமான சொற்களை ஒன்றுபோல் எழுதிய நண்பர் : _____

ஒன்றுபோல் எழுதிய சொற்களின் எண்ணிக்கை : _____



3. பாடத்தில் அடிக்கோடிட்டு எழுதுக.

1. **எளிமையாக** என்பதன் எதிர்ச்சொல் : _____

2. உங்களுக்குச் சிரிப்பை ஏற்படுத்திய தொடர் :

_____

3. அறிவிப்பில் உள்ள மாதத்தின் பெயர் : _____


உரிய விடைகளைப் பாடத்தில் கண்டுபிடித்து அடிக்கோடிட வேண்டும்.


4. தேர்ந்தெடுத்து எழுதுக.



வரிசையில் நிற்கவும்.
பூக்களைப் பறிக்காதீர்.
விபத்துப் பகுதி.
குடிநீரை வீணாக்காதீர்.
பாதை வளைந்து செல்கிறது.
புல் தரையில் நடக்காதீர்.







5. படித்து விடை எழுதுக.



படித்தல் பலகை

குதி	பைகளை	பேசுகிறாய்	வரிக்குள்
பாதை	போட்டி	நிறுத்தும்	வளைந்து
பூங்காவிற்கு	கடினமாக	வேகமாக	செல்கிறது
வானம்	சொல்லுங்கள்	இடம்	வாகனங்கள்

1. 'வ' எழுத்தில் தொடங்கும் சொற்கள் : _____, _____

2. சொற்களைக் கொண்டு அறிவிப்பு ஒன்று எழுதுக.

_____

சொற்களை விரைந்து படிப்பேன்; வண்ணமிடுவேன்.

6. பாடச்சுருக்கம் – படிக்க; விடையளிக்க.

பூங்காவில் ஒரு நாள்...

மிதுனும் மீனுவும் பூங்காவிற்குச் சென்றனர். அறிவிப்புப் பலகைகளைப் படித்தனர். அங்கே அறிவிப்புகள் மாறியிருந்தன. பிறகு, அவை சரி செய்யப்பட்டன.

அறிவிப்புகள்

விபத்துப் பகுதி.

வாகனம் நிறுத்தும் இடம்.

வரிசையில் நிற்கவும்.

புல் தரையில் நடக்காதீர்.

குப்பைகளை இங்கே போடவும்.

பாதை வளைந்து செல்கிறது.

மெதுவாகச் செல்லுங்கள்.



படிக்க எடுத்துக்கொண்ட நேரம்

1. __ : __ 2. __ : __ 3. __ : __

ஆசிரியர் கையேடு

விரைவாகப் படித்து, ஒவ்வொரு முறையும் படித்த நேரத்தைக் குறிக்க வேண்டும்.

1. 'ல்' எழுத்தில் முடியும் சொற்கள் : _____, _____

2. செய்யக் கூடாததைக் குறிக்கும் அறிவிப்பு : _____

3. 'பை' என்ற எழுத்து உள்ள அறிவிப்பு :

_____

7. சொல்வதை எழுதுக.

ஆசிரியர் கையேடு

படித்தல் பலகையில் உள்ளவற்றைச் சொல்லக் கேட்டு எழுத வேண்டும்.

8. தொடர்புடைய சொற்களை எழுதுக.



ஆமை	எறும்பு
குளம்	
தண்ணீர்	
மழை	
மேகம்	
வானவில்	
வண்ணம்	
பூக்கள்	

அப்பளம்

காடு

இனிப்பு

மீன்

ஆசிரியர் கையேடு

எழுதிக் காட்சிப்படுத்த வேண்டும்.



9. தொடர்ந்து எழுதுக.

இனிக்கும் இனிக்கும் சாறு, கரும்பில் உள்ளது.
சிரிக்கும் சிரிக்கும் பொம்மை, பாப்பாவிடம் உள்ளது.
நீந்தும் நீந்தும் மீன், நீரில் உள்ளது.



10. கேட்டு விடை கூறுக.

விளையாட்டு


நானும் அண்ணனும் விளையாடினோம். அது ஒரு புதிய விளையாட்டு. தெரிந்த மரங்கள், பூக்களின் பெயர்களை எழுதிக் கொண்டோம். அண்ணன், மரம்... மரம்... பழ மரம் என்று சொன்னால், நான் ஒரு மரத்தின் பெயரைச் சொல்லவேண்டும். நான் பூ... பூ... நல்ல பூ என்று சொன்னால், அண்ணன் பூவின் பெயரைச் சொல்லவேண்டும். ஒவ்வொரு விடைக்கும் ஒரு புள்ளி. ஒருமுறை சொன்ன விடையை மீண்டும் சொல்லக்கூடாது. மகிழ்ச்சியாக விளையாடினோம். எனக்கு 20 புள்ளிகள் கிடைத்தன. அண்ணனுக்கு 22 புள்ளிகள் கிடைத்தன. வெற்றி பெற்றது யார் என உங்களுக்கே தெரியும்தானே?

இவ்விளையாட்டை எவ்வாறு விளையாட வேண்டும் என உங்கள் மொழிநடையில் கூறுங்கள்.



11. சிந்தித்து விடையளிக்க.





இரண்டு படத்திற்கும் உரிய ஓர் அறிவிப்பு எது?

அ) சத்தம் போடாமல் இருக்கவும். ☐

ஆ) பூக்களைத் தொடாமல் பார்க்கவும். ☐

இ) தூய்மையாக வைத்திருக்க உதவுங்கள். ☐

12. படித்து விடை எழுதுக.



மதி, தீபா, பரிதா ஆகிய மூவரும் தோழிகள். அவர்கள் பள்ளியில் ஆண்டுவிழா நடைபெற இருந்தது. அதற்காகப் பல போட்டிகள் அறிவிக்கப்பட்டன. மூவரும் ஓவியப் போட்டியில் கலந்து கொண்டனர். தீபா இரண்டாம் பரிசு பெற்றாள். பரிதா பரிசு பெறவில்லை. அதனால், அவள் யாரிடமும் பேசவில்லை. மதியும் பரிசு பெறவில்லை. ஆனாலும், அடுத்தமுறை சிறப்பாக வரைவேன்; பரிசை வெல்வேன் எனக் கூறினாள்.

1. தோழிகள் கலந்துகொண்ட போட்டி எது?

பேச்சுப் போட்டி ☐ ஓவியப் போட்டி ☐ நடனப் போட்டி ☐

2. சரியா? தவறா? ✓ செய்க.

போட்டியில் தீபா இரண்டாம் பரிசு பெற்றாள். சரி ☐ தவறு ☐

3. மதி கூறியது சரியா? எப்படி? கூறுக.

13. பின்பற்றி எழுதுக.





மிதுன் செல்லும் இடங்கள்...

- பூங்காவிற்குச் செல்வேன்.
- விளையாடும் இடத்திற்குச் செல்வேன்.
- பாட்டி வீட்டிற்குச் செல்வேன்.
- தோட்டத்திற்குச் செல்வேன்.

நான் செல்லும் இடங்கள்...

14. சொல்லிப் பழகுக.



- காற்று சுழன்று அடித்தது
  சக்கரம் கழன்று விழுந்தது
- பள்ளத்தில் விழுந்த பழம்
  பழுத்த பலாப்பழம்
- கல்லும் முள்ளும் கடந்த வண்டி
  மெல்லச் செல்லும் தள்ளுவண்டி

ஆசிரியர் கையேடு

மீண்டும் மீண்டும் ஒலித்துப் பழகவேண்டும்.



15. பொருத்தமானதை ✓ செய்து காரணம் கூறுக.

1. பள்ளி நூலகத்தில்...



நண்பருடன் பேசுவேன். ☐
அமைதியாகப் படிப்பேன். ☐
சத்தமாகப் பேசுவேன். ☐

2. பூங்காவில்...



பூக்களைப் பறிப்பேன். ☐
பூக்களைப் பறிக்கமாட்டேன். ☐
பூக்களை வாங்குவேன். ☐

3. சாலையில்...



ஓடிக் கடப்பேன். ☐
இருபுறமும் பார்த்துக் கடப்பேன். ☐
ஒருபுறம் பார்த்துக் கடப்பேன். ☐

4. வகுப்பறையில் குப்பையை எடுத்தால்...



குப்பைத் தொட்டியில் போடுவேன். ☐
தரையில் போடுவேன். ☐
வெளியே வீசுவேன். ☐

விழுமியம் / வாழ்வியல் திறன்களைப் பெறுவதற்கேற்பக் கலந்துரையாட வேண்டும்.



செயல்திட்டம் – அறிவிப்புகளை உருவாக்கலாம்.

கொடுக்கப்பட்ட குறிப்புகளைக் கொண்டு உங்கள் பள்ளிக்குத் தேவையான அறிவிப்புகளை எழுதுங்கள். உரிய இடத்தில் காட்சிப்படுத்துங்கள்.

1. பள்ளி வளாகத்தைத் தூய்மையாக வைப்போம்.	தூய்மையாக வைப்போம் வீணாக்காதீர் பறிக்காதீர் பாதுகாப்போம் ஓடிக்காதீர் நிற்கவும் தொட்டியில் போடவும் படிக்கவும் எழுதாதீர் பாதுகாப்பீர்

நான் கற்றவை





1. அறிவிப்புகளைப் படிக்க, உருவாக்க முடியும். ☐
2. விரைவாகப் படிக்க இயலும். ☐
3. சொற்களைப் பிழையின்றி எழுத முடியும். ☐



கற்றுக்கொண்ட திறனுக்கு ✓ செய்ய வேண்டும்.
பெற்ற அடைவுக்கு ஏற்ப வண்ணமிட வேண்டும்.

திரும்பிப் பார்க்கலாம்

படம் பார்த்து நண்பரிடம்
கதை சொல்லுங்கள்.








பெயர்களைப் படியுங்கள்.

தொடர்களை நிரப்புங்கள்.



வானத்தில் _____ மரத்தில் _____

கூவும் _____ நீந்தும் _____

புல்லின்மீது _____ கல்லின்மீது _____

உணவுப் பெயரைக் கண்டுபிடித்து எழுதுங்கள். பிடித்த உணவை எழுதுங்கள்.

பொடி	பொங்கல்
செங்கல்	
தோகை	
ஆசை	
வங்கி	
கடை	





எனக்குப் பிடித்த உணவுகள் :

படத்தை இணைத்துப் படியுங்கள். வினாவிற்கு விடை அளியுங்கள்.

எங்கள் ஊரில் குளம் ஒன்று இருக்கிறது. நாங்கள் அங்கே சென்றோம்.  துள்ளிக் குதித்தன.  மீன் பிடிக்கக் காத்திருந்தது.  தேன் குடித்துவிட்டுப் பறந்தன. கரையில் அதிகமான  விளையாடின.



1. சரியான விடைக்கு ✓ குறியிடுக.

குளக்கரையில் பூக்கள் இல்லை. ☐

குளக்கரையில் பூக்கள் இருந்தன. ☐

2. எதிர்ச்சொல்லை எடுத்து எழுதுக.

குறைவான ⟷ _____

நானும் படிப்பேன்: வண்ணமிடுவேன்





நி பி கி தி யி ணி

சி லி ழி ளி வி னி

மி டி ரி றி நி ஞி



விழி	சிப்பி	நிமிடம்	நிலக்கரி
கிளி	மயில்	மின்மினி	ஒலிப்பான்
தமிழ்	நன்றி	வானவில்	மிதிவண்டி
அரிசி	கணினி	பின்னல்	தின்றாள்

கிளி

அழகிய கிளி

மரத்தில் அழகிய கிளி



மின்மினி

மின்னிய மின்மினி

இரவில் மின்னிய மின்மினி



மின்னிய மின்னல்

சிறிய சிலந்தி

நிழலில் நில்

கிணற்றில் கிண்ணம்





அணில் கடித்த பப்பாளி.

மதி மிதிவண்டி ஓட்டினான்.


தம்பி மிட்டாய் தின்றான்.

வானில் அழகிய வானவில்.









நானும் படிப்பேன்; வண்ணமிடுவேன்





பீ லீ யீ தீ ஈ ளீ

டீ ரீ சீ வீ னீ கீ

மீ நீ ஞீ ழீ றீ ணீ




மீதி	வீரன்	இளநீர்	கல்லீரல்
கீரி	சீரகம்	பீரங்கி	கீழ்வானம்
மீன்	நீச்சல்	சீற்றம்	பீர்க்கங்காய்
நீளம்	கிரீடம்	தண்ணீர்	சீத்தாப்பழம்

மீன்

நீந்திய மீன்

நீரில் நீந்திய மீன்



நீர்

ஆற்றில் நீர்

நீளமான ஆற்றில் நீர்

நீரில் நிலா

கீற்றில் கிளி

வீட்டில் விசிறி

பீர்க்கங்காய் பிடி

நீலா நீச்சல் அடித்தாள்.

காட்டில் கீரி பார்த்தான்.

பன்னீர் வண்டி ஓட்டினார்.

மீன்கள் கடலில் நீந்தின.









நானே செய்வேன்



1. கேட்டு விடை கூறுக.

எங்கள் வீட்டில் ஒரு பழக்கம் உண்டு. விடுமுறை நாளில் அனைவரும் பிடித்த இடத்திற்குச் செல்வோம். திரும்பி வந்ததும் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்வோம். அப்படித்தான் இன்றும் நடந்தது. நான் சென்ற நேரம் அனைவருமே அமைதியாகப் படிக்கத் தொடங்கி இருந்தனர்; நானும் ஒரு புத்தகம் எடுத்துப் படித்தேன் என்றார் தாத்தா. அம்மா, தன் தோழி வீட்டில் அனைவரும் நலமாக இருக்கிறார்கள்; நமது நலம் பற்றியும் கேட்டார்கள் என்று தெரிவித்தார். இன்று எப்போதும் இல்லாத அளவிற்குப் பல கடைகள் இருந்தன; ஆனால், நான் காய்கறிகள், பழங்களை மட்டுமே வாங்கினேன் என்றார் அப்பா. பாட்டியுடன் சென்ற நானும் அண்ணனும் அலைகளோடு விளையாடியதைச் சொல்லி மகிழ்ந்தோம்.

எங்கள் வீட்டில் உள்ளவர்கள் எத்தனை பேர்? நாங்கள் சென்ற இடங்கள் எவை?

2. படித்துக்காட்டுக.



ஆசிரியர் கையேடு

நிறுத்தாமல் எத்தனை சொற்களைப் படிக்க முடிகிறது? நண்பர்களுடன் போட்டியிட்டுப் படிக்கலாம்.

3. பத்தியைப் படித்து விடையளிக்க.

காட்டில் ஒரு விழா. இந்த மாதம் தலைவராக ஆந்தை பொறுப்பு ஏற்றது. விருந்து நடந்தது. அனைத்தும் உணவைச் சுவைத்து மகிழ்ந்தன. எறும்பு எதையோ சிந்தித்தது. என்ன சிந்திக்கிறாய்? என்றது கிளி. நிறைய உணவு மீதி உள்ளது என்றது எறும்பு. விருந்திற்கு யானை வந்தது. எறும்பு மகிழ்ந்தது.



1. பத்தியில் உள்ள பறவைகளின் பெயர்களை எடுத்து எழுதுக.

_____

2. உணவு வீணாகும் எனக் கவலைப்பட்டது எது?

எறும்பு ☐ கிளி ☐

3. விருந்தில் இறுதியாக எது சாப்பிட்டு இருக்கும்?

_____

4. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.

இந்தக் காட்டில்,

அ) ஒருவரே தலைவராக இருப்பார். ☐

ஆ) மாதம் ஒருவர் தலைவராக இருப்பார். ☐

இ) தலைவர் என்று யாரும் இல்லை. ☐

5. இந்த நிகழ்வுக்கு ஏற்ற அறிவிப்பு ஒன்றை உருவாக்குக.

_____




மகிழ் பக்கம்



வரைந்து வண்ணம் தீட்டலாம்.

செய்து மகிழலாம்.



என்னால் முடியும்!



எறும்பு மகிழ்ந்தது.

புல் மேய்கிறது.

தேன் குடித்தது.

மழையில் நனைந்தோம்.

நண்பர்களோடு விளையாடுவேன்.

தோட்டத்திற்குச் செல்வேன்.

கோழி ஓடி வரும்.

குப்பைகள் விழுந்தன.

கடைக்குச் செல்கிறேன்.

அறிவிப்புகளைப் படிப்பேன்.

குருவிக் குஞ்சுகள் மகிழ்ந்தன.

